# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109461

1. District : மாவட்டம் கடலூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year ஆண்டு 2023 | FIR No. மு.த.அ. எண் 9/2023 | Date நாள் 20.07.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act — Sections பிரிவுகள்: 7, 12
   (ii) Act சட்டம்: 1988 as amended by The Prevention — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் 19.07.2023 — Date to : நாள் வரை 19.07.2023
   Time Period : நேர அளவு
   Time from நேரம் முதல் 13.00 hrs — Time to : நேரம் வரை 18.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.07.2023 — Time : நேரம் 1100 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III — Time : நேரம் 1100 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 18 கி.மீ. மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அண்ணாகிராமம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : __ District : __
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.முருகன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்தசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52
   (d) Nationality : நாட்டினம் இந்தியர்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் ____
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் ____
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர்
   (g) Address : முகவரி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் .

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   குற்றம்சாட்டப்பட்டவர்கள் வரிசை எண் 1 முதல் 7 வரை தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 20.07.2023 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, G.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் G.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர். பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.A/535/2023

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 20/7/23 G.முருகன்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் [signature] 20/7/23

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20-07-2023 at 12.30 hrs

Name: பெயர் N. DEVANATHAN
Rank: நிலை ADSP ....No. எண் V.A.C. Cud.

பக்கம் 1–ன் தொடர்ச்சி – தனித்தாள்

**கடலூர் ஊ.த.க.பிரிவு குற்ற எண். 9/2023–ல் பக்கம் 1 வரிசை எண்.7–ல் கூறியுள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களின் வரிசை எண் 1 முதல் 7 வரை விவர தனித்தாள் :**

(1) வ.ஜானகிராமன், வயது 72/2023, த/பெ வரதராஜ், ஒன்றிய குழு தலைவர், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், கடலூர் மாவட்டம், வீட்டு முகவரி–எண்.26,மாரியம்மன் கோவில் தெரு, வேலன்காடு கிராமம், அக்கடவல்லி அஞ்சல், பண்ருட்டிதாலுக்கா, கடலூர் மாவட்டம்.

(2) சு.கந்தன், வயது50/2023, த/பெ சுந்தமூர்த்தி, 5 வது வார்டு கவுன்சிலர், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், கடலூர் மாவட்டம், வீட்டு முகவரி–மாரியம்மன் கோவில் தெரு, ஒறையூர் கிராமம் மற்றும் அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

(3) சு.சண்முகம், வயது60/2023, த/பெ சுப்புராயன், பெருமாள்கோவில் தெரு, பாலூர், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

(4) கு.பன்னீர்செல்வம், வயது57/2023, த/பெ குப்புசாமி, 6 வது வார்டு கவுன்சிலர், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், கடலூர் மாவட்டம், வீட்டு முகவரி–எண்.662,அங்காளம்மன் கோவில் தெரு, அம்மாபேட்டை, பண்டரகோட்டை அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

(5) V.M.தமிழ்செல்வன், வயது 48/2023, த/பெ மாயவன், எண்.107/B, குயிலாப்பாளையம், பல்லவராயநத்தம் அஞ்சல், பண்ருட்டிதாலுக்கா, கடலூர் மாவட்டம்.

(6) P.துரைராஜ், வயது 52/2023, த/பெ பெருமாள், எண்.8,மாரியம்மன் கோவில்தெரு, கண்டரக்கோட்டை, பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

(7) கா.சேகர், வயது52/2023, த/பெ காத்தவராயன், வள்ளலார் நகர், புலவனூர் கிராமம், கண்டரக்கோட்டை அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

F. [signature] 20/7/23

நாள் : 20.07.2023 அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) ஆய்வுக்குழு ஆய்வாளரான G.முருகன் ஆகிய நான் 19.07.2023 அன்று எனது அலுவலகத்தில் இருக்கும் போது கடலூர் மாவட்டம், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஒன்றியத்தில் ஒப்பந்த பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களிடம் லஞ்ச பணம் பெற்று வைத்துள்ளார் என்றும், அதனை அவர் 19.07.2023 அன்று சம்மந்தப்பட்ட பணி நடைபெறும் கிராமங்களுக்கு சம்மந்தப்பட்ட ஒன்றிய கவுன்சிலர்களுக்கும், ஒப்பந்தப்பணி வழங்கப்படாத கவுன்சிலர்களுக்கும் அந்த பணத்தினை பங்கிட்டு கொடுக்க இருப்பதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது, பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு காலை சுமார் 11.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ந.தேவநாதன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு மதியம் சுமார் 01.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு ஒன்றிய குழு தலைவர், ஒன்றிய கவுன்சிலர்களுக்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. ந.தேவநாதன் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் நண்பகல் சுமார் 12.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கிழக்கு மேற்காக செல்லும் கடலூர்– பண்ருட்டி சாலையின் வடபுறமாக அமைந்துள்ள அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் அண்ணாகிராம ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மதியம் சுமார் 01.00 மணிக்கு தெற்கு பார்த்து அமைந்து இருக்கும் அண்ணாகிராம ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்கு சென்று மெயின் கேட்டை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். பிரதான வாயிலின் இடது புறம் உள்ள அண்ணாகிராம ஒன்றியக் குழு தலைவர் அறைக்கு சென்றோம். அங்கு ஒன்றியக் குழு தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் என்னையும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் ஒன்றியக் குழு தலைவரிடம் விசாரித்த போது அவர் தனது பெயர்

F.G. [signature] 20/7/23

V.ஜானகிராமன், வயது 72, த/பெ வரதராஜ், ஒன்றியக் குழு தலைவர், அண்ணாகிராமம் ஊராட்சிஒன்றியம் என்றும், உடன் இருந்த நபர்களை விசாரித்தபோது, (1) S. கந்தன், 5வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (2) S. சண்முகம், இவரது மனைவி திருமதி.ச.உமா, 20வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (3) V.M. தமிழ்செல்வன், இவரது மனைவி திருமதி.த.ஸ்ரீதேவி, 21வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (4) K. மாணிக்கம், அ.தி.மு.க. கிளை செயலாளர், இவரது மருமகள் திருமதி.த.நளினி. 14வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (5) S.C.D.சண்முகம், 18வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (6) P. துரைராஜ், இவரது மனைவி திருமதி.து.உமா, 8வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (7) K. பன்னீர்செல்வம், 6வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (8) K.சிவக்குமார், இவரது மனைவி திருமதி.கோமதி, 17வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (9) M.அருள்செல்வம், 16வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், என்று கூறினார்கள். அண்ணாகிராம ஊராட்சி ஒன்றிய அலுவலக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. N. சுடர்வேல்மூர்த்தி என்பவர் ஆஜரில் இருந்தார். அவரை திடீர் ஆய்வு முடியும் வரை சோதனை குழுவினருடன் உடனிருக்க கேட்டுக்கொண்டேன். அவரும் சம்மதம் தெரிவித்து உடன் இருந்தார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை அவர்களிடம் ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அங்கிருந்தவர்கள் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். மேற்படி அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 56 x 14 அடி நீள அகலமுள்ளது. அதன் மேற்குபுறம் அண்ணாகிராம ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் அறை சுமார் 15 x 15 அடி நீள அகலம் கொண்டது. அந்த அறையில் ஒன்றியக் குழு தலைவர் வடக்கு பார்த்தவாறு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவருக்கு பின்னால் சுவரில் இரண்டு மர அலமாறி பொருத்தப்பட்டிருந்தது. அதனை சோதனை செய்ததில் அதில் பொருட்கள் ஒன்றும் இல்லை. ஒன்றியக் குழு தலைவர் அறையில் வார்டு கவுன்சிலர்கள் நாற்காலியில் அமர்ந்திருந்தனர். அந்த அறையை சோதனை செய்தபோது, ஒன்றியக் குழு தலைவர் அமர்ந்திருந்த மேஜையின் டிராயர்களை சோதனை செய்தபோது, அவருக்கு வலதுபுறத்தில் இருந்த மேல் டிராயரில் பணம் வைக்கப்பட்டிருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.97,000/- (500 x 194 = 97,000) இருந்தது. மேலும், அங்கிருந்தவர்களை திரேக சோதனை செய்ய போகும் விவரத்தை தெரிவித்து அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டது. பின்னர் அவர்களது சம்மதத்தின் பெயரில் ஒவ்வொருவராக மறைவிடத்தில் திரேக சோதனை செய்தபோது, கீழ்கண்டவாறு அவர்களது சட்டைப் பையில் தொகை கண்டெடுக்கப்பட்டது. அதன் விவரம் 1) S. கந்தன், ரூ.25,000/– (500 x 50 = 25,000) (2) S. சண்முகம், ரூ.25,000/– (500 x 50 = 25,000) (3) பன்னீர்செல்வம் ரூ.25,000/– (500

ஜெ. ஜெகநாதன் 20/4/23

x 50 = 25,000), (4) தமிழ்செல்வன் ரூ.25,000/– (500 x 50 = 25,000), (5) துரைராஜ் ரூ.25,000/– (500 x 50 = 25,000), (6) சேகர் ரூ.87,000/– (500 x 174= 87,000) ஆக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சோதனையில் மொத்தம் ரூ.3,09,000/– கண்டெடுக்கப்பட்டது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக ஒன்றியக் குழு தலைவர் அவர்களிடம் விவரம் கேட்க, அவர் ஒப்பந்தப்பணிகள் கிடைக்கப்பெற்ற காண்டிராக்டர்கள் கவுன்சிலர்களுக்கு கொடுத்த அன்பளிப்பு என்று கூறினார். மேலும் அங்கிருந்த கவுன்சிலர்களிடம் கேட்க அவர்கள், கடந்த 14.07.2023 ஆம் தேதி நடைபெற்ற ஒன்றிய குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சுமார் ஒரு கோடியே முப்பது லட்சம் மதிப்பிலான ஒப்பந்தப்பணிகளை கரும்பூர், கோட்லாம்பாக்கம், பி.என்.பாளையம் மற்றும் எழுமேடு ஆகிய கவுன்சிலர்களுக்கு வழங்கப்போவதாகவும், ஒப்பந்தப்பணிகள் இல்லாத கவுன்சிலர்களுக்கு காண்டிராக்டர்களிடமிருந்து கமிஷன் தொகையினை பெற்று தருகிறேன் என்று கூறி, ஒன்றியக் குழு தலைவர் அவர்கள் இன்று எங்களுக்கு முதல் தவணையாக பிரித்து கொடுத்த பணம் என்று தெரிவித்தனர். மேற்சொன்ன ஆய்வின்போது கண்டெடுக்கப்பட்ட பணம் ரூ.3,09,000/–ஐ லஞ்சப்பணம் என கருதுவதற்கு ஆவண சாட்சியங்களுடன் கூடிய தகுந்த முகாந்திரம் இருந்தது. மேலும், எனது விசாரணையில் அவர்கள் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கான சட்டப்பூர்வமான முகாந்திரம் எதனையும் கூறாததால், மேற்படி கண்டுபிடிக்கப்பட்ட பணம் ரூ.3,09,000/–த்தை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும், 1) ஒன்றியக் குழு தலைவர் அவர்களாள் பச்சை நிற மையால் கைப்பட எழுதப்பட்ட கவுன்சிலர்களுக்கு பணப்பட்டுவாடா குறித்த குறிப்புகள் கொண்ட A4 தாள் (பக்கம் 1 மற்றும் 2), (2) ஒன்றியக் குழு தலைவர் அவர்களின் பணம் பட்டுவாடா தொடர்பான குறிப்புகள் அடங்கிய நோட்புக் (பக்கம் 1 முதல் 16 வரை), (3) ஊராட்சி ஒன்றியம் அண்ணாகிராமம் தீர்மான புத்தகம் (பக்கம் 1 முதல் 464 வரை (உபயோகப்படுப்பட்டது 226)) (4) ந.க.எண்.A3/1078/2023, நாள் 28.06.2023 (பக்கம் 1 முதல் 6 வரை), (5) ந.க.எண்.A3/1078/2023, நாள் 03.07.2023 (பக்கம் 1 மற்றும் 2), (6) அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய வருகைப் பதிவேடு சான்றொப்பமிட்டது (பக்கம் 1 முதல் வரை) ஆகிய பதிவேடுகள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மதியம் 1.00 மணி முதல் மாலை 06.30 மணிக்கு தயார் செய்யப்பட்டது. 19.07.2023 ஆம் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.3,09,000/–, (1) V.ஞானகிராமன், (2) S. கந்தன், (3) S. சண்முகம், (4) பன்னீர்செல்வம், (5) தமிழ்செல்வன், (6) துரைராஜ் (7) சேகர் ஆகியோரது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட அசல் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றுடன் இன்று 20.07.2023 ந்தேதி காலை 11.00 மணிக்கு, கடலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தயார் செய்து தங்களிடம் கொடுக்கிறேன்.

எனவே (1) அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் V.ஜானகிராமன், (2) S. கந்தன், 5வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (3) S. சண்முகம், 20வது வார்டு ஒன்றிய கவுன்சிலர் கணவர், (4) K. பன்னீர்செல்வம், 6வது வார்டு ஒன்றிய கவுன்சிலர், (5) V.M. தமிழ்செல்வன், 21வது வார்டு ஒன்றிய கவுன்சிலர் கணவர், (6) P. துரைராஜ், 8வது வார்டு ஒன்றிய கவுன்சிலரின் கணவர், (7) திரு.கா.சேகர், த/பெகாத்தவராயன், வள்ளலார் நகர், புலவனூர் கிராமம், கண்டரக்கோட்டைஅஞ்சல், பண்ருட்டிதாலுக்கா, கடலூர் மாவட்டம் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம் xxxx) 20.07.23. G.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.

Sir,

Received the above complaint on 20.07.2023 at about 11.00 hrs., Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.09/2023, U/s 7, 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 20.07.2023 at 12.00 hrs., sd/-xxxxx 20.07.2023 (N.DEVANATHAN), Additional Superintendent of Police, V & AC, Cuddalore.

ADSP, V&AC,
Cud.